புதுச்சேரி முதியோர் பராமரிப்பு சங்கம்
(ஒரு புதுச்சேரி அரசு நிறுவனம்)
எண்.26, 4வது குறுக்குத் தெரு, பிருந்தாவனம், புதுச்சேரி -605 013.
-0-0-0-

எண்.1A/பாண்கேர்/2011 தேதி: 16.08.2011.

## பத்திரிக்கை குறிப்பு

புதுச்சேரி மூத்த குடிமக்கள் பராமரிப்பு சங்கம், புதுவை, ஜிப்மர் மருத்துவமனை மற்றும் ஸ்ரீராம் சாரிட்டபுள் டிரஸ்ட்டுடன் இணைந்து, மூத்த குடிமக்களுக்கு இலவச "கண் பரிசோதனை முகாம், இலவச மூக்கு கண்ணாடி வழங்குதல், இலவச கண்புரை அறுவை சிகிச்சை (Cataract Surgery) மற்றும் இலவச காது கேட்கும் கருவி" வழங்க [Hearing Aid Machine], இச்சங்கம் உத்தேசிக்கப்பட்டுள்ளது. எனவே, எதிர்வரும் 23.08.2011 (செவ்வாய்க்கிழமை) அன்று புதுவை, 45 அடி சாலையில் அமைந்துள்ள ஆந்திர மகா சபா வளாகத்தில், காலை 8.30 மணிமுதல் பிற்பகல் 5.00 மணிவரை இம்முகாம் நடைபெறும்.

2. இம்முகாமில், கண் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட மூத்த குடிமக்களுக்கு இலவச மூக்கு கண்ணாடி, இச்சங்கத்தின் மூலம் வழங்கப்படும். மற்றும் கண்புரை உள்ள நோயாளிகள் முகாம் தினத்தன்றே ஜிப்மர் மருத்துவமனைக்கு அழைத்து செல்லப்படுவார்கள். அவர்களுக்கு உள்விழி லென்ஸ், அறுவை சிகிச்சை, மருந்து, தங்கும் வசதி (Bed), உணவு மற்றும் போக்குவரத்து அனைத்தும் இலவசம், அறுவை சிகிச்சை செய்தவர்களுக்கு ஒரு மாதம் கழித்து மறுபரிசோதனையும் இலவசமாக செய்யப்படுகிறது.

3. கடந்த 08.08.2011 அன்று, இச்சங்கத்தில் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை கொடுத்த மூத்த குடிமக்கள் மட்டுமே இந்த முகாமிற்கு அனுமதிக்கப்படுவார்கள்.

DEPARTMENT OF INFORMATION & PUBLICITY
PUDUCHERRY
GOVERNMENT OF PUDUCHERRY

(R. சாந்தி)
செயலர்,(பாண்கேர்)